**Puducherry Agro Service and Industries Corporation Limited**
(A Govt. of Puducherry Undertaking)
Agro House, Thattanchavady, Puducherry 605 009.

எண். 25/44/PASIC/Hort/2021-22 நாள் 07.03.2026

**ஒப்பந்தப் புள்ளி - ஏல அறிவிப்பு**

புதுச்சேரி மாநிலம், அரசூர் மற்றும் கருவடிக்குப்பம், பாசிக் தோட்டக்கலை பண்ணைகளில் உள்ள பழ மற்றும் தென்னை மரங்களின் மேல் மகசூலை மார்ச் 2026 முதல் பிப்ரவரி 2027 முடிய அனுபவித்துக்கொள்வதற்கு தனித்தனியே மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மேலாண் இயக்குநர், பாசிக் நிறுவனம், தட்டாஞ்சாவடி, புதுச்சேரி - 9 அவர்களால் வரவேற்கப்படுகிறது.

மேலும், ஒப்பந்த படிவங்களை 07.03.2026 முதல் 12.03.2026 மதியம் 1.00 மணி வரையில் தலைமை அலுவலக பாசிக் காசாளரிடம் ரூ.118/- ஐ (ரூ.100+18) (ரூபாய் நூற்று பதினெட்டு மட்டும்) (GST 18%) செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 12.03.2026 மாலை 3.00 மணி வரை பெற்றுக்கொள்ளப்பட்டு, அன்று மாலை 4.00 மணியளவில் ஒப்பந்தக்காரர்கள் முன்னியலையில் பிரிக்கப்பட்டு ஏலம் விடப்படும். மேலும் விபரங்களுக்கு பாசிக் தலைமை அலுவலகத்தை அனுகவும் மற்றும் இணையதள முகவரி: www.py.gov.in மூலம் தமிழில் தெரிந்து கொள்ளலாம்.

07/03

மேலாண் இயக்குநர்

# குத்தகை ஒப்பந்த புள்ளி அறிவிப்பு

பாசிக் நிறுவனத்திற்கு சொந்தமான அரசூர் மற்றும் கருவடிக்குப்பம் பாசிக் பண்ணைகளில் உள்ள பழ மற்றும் தென்னை மரங்களை மார்ச் 2026 முதல் பிப்ரவரி 2027 முடிய விளையக்கூடிய மகசூல்களை டெண்டர் முறையில் தனித்தனியே குத்தகைக்கு விடப்படவுள்ளது.

ஒப்பந்தப் புள்ளியில் கலந்துகொள்ள விருப்பம் உள்ளவர்கள் அரசூர் மற்றும் கருவடிக்குப்பம் பண்ணைகளில் மரங்களுக்கு தனித்தனி ஒப்பந்த புள்ளி படிவங்களை 07.03.2026 ஆம் தேதியிலிருந்து 12.03.2026 தேதி பிற்பகல் 1.00 மணி வரை பாசிக் காசாளரிடம் ரூ.118/- ஐ செலுத்தி பெற்றுக்கொள்ள வேண்டும். (GST ரூ.18/-). மேற்படி பண்ணையில் உள்ள மரங்களின் எண்ணிக்கை விவரம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

அரசூர் மற்றும் கருவடிக்குப்பம் பண்ணைக்கு தனிதனியே பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்த படிவங்களை மேலாண் இயக்குநர், பாசிக் அவர்களுக்கு 12.03.2026 தேதி மாலை 3.00 மணிக்குள் வந்தடையுமாறு தனித்தனி உரையில் மூடிமுத்திரையிட்டு அனுப்பி வைக்க வேண்டும். ஒப்பந்த புள்ளியுடன் முன் வைப்புத் தொகையாக ரூ. 10,000/- (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) கேட்பு வரைவோலை (Demand Draft) மற்றும் அரசூர் பண்ணைக்கும் ரூ.5,000/- (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) கேட்பு வரைவோலை (Demand Draft) கருவடிக்குப்பம் பண்ணைக்கும் தனித்தனியே மேலாண் இயக்குநர், பாசிக், புதுச்சேரி என்ற முகவரியில் எடுத்து இணைக்க வேண்டும். கேட்பு வரைவோலை இணைக்காத ஒப்பந்த புள்ளிகள் நிராகரிக்கப்படும். டெண்டர் 12.03.2026 அன்று மாலை 4.00 மணிக்கு டெண்டர் குழு உறுப்பினர்கள் முன்னிலையில் பிரித்து பரிசீலனை செய்யப்படும். ஒப்பந்தப்புள்ளி பரிசீலிக்கப்பட்டு மிக உயர்ந்த தொகையை முதல் கேள்வியாகக் கொண்டு பகிரங்க ஏலம் விடப்படும். பகிரங்க ஏலத்தில் கேட்கப்படும் உயர்ந்த தொகை நியாயமானதாக இருந்தால் ஒப்புக்கொள்ளப்படும்.

07/03

**மேலாண் இயக்குநர்**

இணைப்பு

| வ.எண் | பழமரங்களின் பெயர் | அரசூர் பாசிக் பண்ணையில் உள்ள பழமரங்களின் எண்ணிக்கை | கருவடிக்குப்பம் பாசிக் பண்ணையில் உள்ள பழமரங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | தென்னை மரம் | 655 Nos. | 94 Nos. |
| 2. | மாமரம் | 390 Nos. | 37 Nos. |
| 3. | சப்போட்டா மரம் | 74 Nos. | 24 Nos. |
| 4. | பலாமரம் | 16 Nos. | 3 Nos. |
| 5. | புளியமரம் | 7 Nos. | 2 Nos. |
| 6. | பனைமரம் | 174 Nos. | - |
| 7. | எலுமிச்சை | - | 8 Nos. |

...NAGER TECHNICAL
PASIC

## நிபந்தனைகள்

1. ஒப்பந்தப்புள்ளி பரிசீலிக்கப்பட்டு மிக உயர்ந்த தொகையை முதல் கேள்வியாகக் கொண்டு பகிரங்க ஏலம் விடப்படும். ஏலதாரர் 24 மணி நேரத்திற்குள் ஏலத் தொகை முழுவதையும் அலுவலகத்தில் செலுத்தி இரசீது பெறவேண்டும். அவ்வாறு செலுத்த தவறினால் முன் பணத்தை இழக்க நேரிடும்.

2. மிக உயர்ந்த தொகை கோரியவர் தவிர மற்றவர்களின் முன்பணம் உடனடியாக திருப்பித்தரப்படும். மிக உயர்ந்த தொகை குறிப்பிட்டவர்களின் முன்பணம் காப்புத் தொகையாக அலுவலகத்திலேயே வைக்கப்பட்டிருந்து மேற்குறிப்பிட்ட மகசூல் அறுவடை தேதி முடிவடைந்த பின்னரே திருப்பித்தரப்படும்.

3. முழுத்தொகையும் செலுத்திய பின்னரே மகசூலை அறுவடை செய்ய அனுமதிக்கப்படுவார்கள்.

4. ஒப்பந்த ஏலத்தை ஏற்றுக் கொள்ளவோ அல்லது நிராகரிக்கவோ பாசிக் மேலாண் இயக்குநருக்கு முழு உரிமை உண்டு.

5. மகசூலை ஒப்பந்தக்தாரர்கள் தங்கள் சொந்த செலவிலேயே அலுவலக நேரத்தில் அறுவடை செய்ய வேண்டும். மேலும், மகசூலைப் பாதுகாக்கும் பொறுப்பு அவர்களையே சாரும்.

6. மகசூலை மரங்களுக்கு சேதம் ஏற்படுத்தாமல் அறுவடை செய்து மேலாளர் அனுமதி பெற்ற பின்னரே எடுத்து செல்ல வேண்டும். ஒவ்வொரு முறை மகசூல் அறுவடை செய்து எடுத்துச்செல்லும் போதும் பண்ணையில் உள்ள பதிவேட்டில் பதிவு செய்து பிறகே எடுத்துச் செல்ல வேண்டும். மரங்களுக்கோ அல்லது பண்ணைச் சொத்துக்கோ சேதம் ஏற்பட்டால் ஒப்பந்ததாரரே முழுப் பொறுப்பையும் ஏற்று நிறுவனத்திற்கு ஏற்படும் நஷ்டத்திற்கு ஈடு செய்வதுடன் இந்த நிறுவனத்தில் செலுத்தியுள்ள காப்புத் தொகையையும் இழக்க நேரிடும். மேலும், ஒப்பந்தம் ரத்து செய்யப்படும்.

7. பண்ணை வளாகத்தினுள் எந்தவிதமான வியாபார நடவடிக்கைகளும் கண்டிப்பாக வைத்துக் கொள்ளக் கூடாது.

8. மேற்குறிப்பிட்ட மகசூலைத் தவிர மரத்திற்கு ஊறுவிளைவிக்கும் வகையில் கிளைகளை வெட்டுதல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடக் கூடாது.

9. மகசூலைப் பாதுகாக்கும் பொறுப்பில் உள்ளவர்கள் அலுவலக சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு நடக்க வேண்டும்.

10. பண்ணையில் பணிபுரியும் எந்த நபரையும் காவலுக்கோ அல்லது வேறு எந்த வேலைக்கோ அமர்த்தக் கூடாது.

11. ஏலதாரர் மகசூலை அறுவடைக்கு ஈடுபடுத்தும் நபருக்கு அடையாள அட்டையை இந்த அலுவலகத்திலிருந்து பெற்று வழங்க வேண்டும். அவர்கள் மட்டுமே பண்ணை வளாகத்தினுள் அனுமதிக்கப் படுவார்கள்.

12. ஒப்பந்தப் புள்ளிகளை கோர விரும்புவர்கள் அரசூர் மற்றும் கருவடிக்குப்பம் பாசிக் பண்ணைகளை அலுவலக நேரத்தில் பார்வையிடலாம். பார்வை நேரம் காலை 9.00 மணி முதல் மாலை 5.30 மணி வரை.

## ஒப்பந்தப்புள்ளி

1. ஏல தாரரின் பெயர் :
2. விலாசம் :

3. கேட்பு வரைவோலை விவரம் :

| வ.எண் | விவரம் | ஏலத்தொகை |
|---|---|---|
| 1 | அரசூர் பாசிக் பண்ணையில் உள்ள பழ மற்றும் தென்னை மரங்கள் | |
| 2 | கருவடிக்குப்பம் பாசிக் பண்ணையில் உள்ள பழ மற்றும் தென்னை மரங்கள் | |

**கையொப்பம்**